
**டிசம்பர் – 28**

# TNPSC துளிகள்

- குவைத் நாடானது, அதன் பொருளாதார பன்முகப்படுத்தல் உத்தியின் ஒரு பகுதியாக பிராந்திய மற்றும் உலகளாவிய வர்த்தகத்தில் அதன் பங்கை அதிகரிக்கும் நோக்கில் பௌபியன் தீவில் முபாரக் அல்-கபீர் துறைமுகத்தை கட்டமைப்பதற்காக சீனாவுடன் 4.1 பில்லியன் டாலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் உர்ஜித் படேல், உலகளவில் பொருளாதாரத் தடைகளின் அதிகரித்து வரும் பயன்பாடு குறித்து "The Great Sanctions Hack" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.
- டெக் மஹிந்திரா குளோபல் செஸ் லீக் (TechM GCL) 2025 என்றும் அழைக்கப்படும் 3வது உலக சதுரங்கப் போட்டியில் (GCL 2025) ஆல்பைன் SG பைப்பர்ஸ் அணி வெற்றி பெற்று உள்ளது.
- புது டெல்லி (டெல்லி) முழுவதும் 100 இடங்களில் ஒரு தட்டுக்கு 5 ரூபாய் என்ற மானிய விலையில் உணவு வழங்குவதற்காக என டெல்லி அரசு “அடல் உணவகத் திட்டத்தை” அறிமுகப்படுத்தியுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கீழடி வெள்ளப் படிவுகள்




- சுமார் 1,155 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டின் வைகை வெள்ளப் பெருக்கில் கீழடி குடியிருப்புப் பகுதிகள் புதையுண்டதாக தொல்பொருள் சான்றுகள் காட்டுகின்றன.
- சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள கீழடி ஆனது வைகை நதி வெள்ளச் சமவெளியில் அமைந்த ஒரு மேட்டுப் பகுதியில் உள்ளது.
- சங்க இலக்கியத்தில் விவரிக்கப்பட்டுள்ள நகர்ப்புற வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் செங்கல் கட்டமைப்புகள், கால்வாய்கள், தரைகள் மற்றும் மட்பாண்டங்கள் அகழ்வாராய்ச்சிகளில் கண்டறியப்பட்டுள்ளன.
- வண்டல் படிவு அடுக்குகள் ஆனது, செங்கல் கட்டமைப்புகளுக்கு கீழே அமைந்த கரடுமுரடான மணல் மற்றும் மேற்பரப்பில் உள்ள வண்டற்களிமண் அதிக சக்தி வாய்ந்த வெள்ளப் பாதிப்பினைக் குறிப்பதுடன், மீண்டும் மீண்டும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கைக் குறிக்கின்றன.

- இந்தக் கண்டுபிடிப்புகள், ஹோலோசீன் பிற்பகுதியில் ஏற்பட்ட பருவநிலை மாறுபாடு மற்றும் தென்னிந்தியாவில் மனிதக் குடியிருப்புகளை சுற்றுச்சூழல் சார்ந்த காரணிகள் எவ்வாறு வடிவமைத்தன என்பதைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.

# தேசியச் செய்திகள்

## BRO கையேடு




- எல்லைப் பகுதிகளில் சாலைக் கட்டுமானத்தை ஒழுங்குபடுத்துவதற்காக எல்லைச் சாலைகள் அமைப்பு (BRO) கையேட்டைப் பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்டார்.
- இந்தக் கையேடு "சாலை உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் (DPRs) தயாரிப்பதற்கான வழிகாட்டி" என்று தலைப்பிடப் பட்டுள்ளது.
- இது திட்டமிடல், வடிவமைப்பு, கட்டுமான முறை, தரக் கட்டுப்பாடு மற்றும் சாலைக் கட்டமைப்பு திட்டங்களுக்கான செலவுப் பகுப்பாய்வு ஆகியவற்றைத் தரப்படுத்துகிறது.
- இந்த வழிகாட்டி எல்லை மற்றும் தொலைதூரப் பிராந்திய உள்கட்டமைப்பில் நேர தாமதங்கள் மற்றும் செலவு மீறல்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்ற BRO ஆனது பாதுகாப்பு, பேரிடர் மீட்பு மற்றும் பிராந்திய மேம்பாட்டை ஆதரிக்கும் சாலைகளை உருவாக்குகிறது.

## தீவிரவாத எதிர்ப்பு மாநாடு

- புது டெல்லியில் நடைபெறும் தீவிரவாத எதிர்ப்பு மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- இந்த மாநாட்டை உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசியப் புலனாய்வு முகமை (NIA) ஏற்பாடு செய்துள்ளது.
- தீவிரவாத எதிர்ப்பிற்காக 'முழு அரசாங்க' அணுகுமுறையின் மூலம் நிறுவனங்களிடையே ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.
- தீவிரவாத நிதியுதவியைச் சீர்குலைத்தல், வெளிநாட்டு அதிகார வரம்புகளிலிருந்து

ஆதாரங்களைச் சேகரித்தல், டிஜிட்டல் தடயவியல் மற்றும் தீவிரமயமாக்கலை எதிர்த்தல் ஆகியவற்றில் இந்த மாநாட்டின் விவாதங்கள் கவனம் செலுத்துகின்றன.

- இந்த நிகழ்வு எதிர்கால தீவிரவாத எதிர்ப்புக் கொள்கைகள் மற்றும் தேசியப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான உத்திகளுக்கான பரிந்துரைகளையும் வழங்குகிறது.




## சந்தாலி மொழியில் அரசியலமைப்பு




- இந்தியக் குடியரசுத் தலைவர் புது டெல்லியில் உள்ள இராஷ்டிரபதி பவனில் சந்தாலி மொழியில் எழுதப்பட்ட இந்திய அரசியலமைப்பை வெளியிட்டார்.
- அரசியலமைப்பு ஆனது சந்தாலி மொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒல் சிக்கி எழுத்து வடிவங்களில் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த வெளியீடு ஒல் சிக்கி எழுத்துக்களின் நூற்றாண்டு விழாவுடன் ஒத்துப்போகிறது.
- 92வது திருத்தச் சட்டம், 2003 மூலம் சந்தாலி மொழி அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டது.
- சந்தாலி மொழி ஜார்க்கண்ட், ஒடிசா, மேற்கு வங்காளம் மற்றும் பீகாரில் பேசப்

படுகின்ற மொழியாகும்.

## இந்தியாவின் முதல் தீவிரவாத எதிர்ப்புக் கொள்கை

- மத்திய அரசானது உள்துறை அமைச்சகத்தின் (MHA) கீழ், இந்தியாவின் முதல் தேசிய தீவிரவாத எதிர்ப்புக் கொள்கையை இறுதி செய்து வருகிறது.
- இந்தக் கொள்கையானது, செயல்பாடு மற்றும் தேசியப் புலனாய்வு முகமையின் (NIA) உளவுத்துறை உள்ளீடுகளுடன் வரைவு செய்யப்பட்டு வருகிறது.
- தீவிரவாத சம்பவங்களைத் தடுக்கவும், அதனை எதிர்த்துப் போராட மற்றும் எதிர் நடவடிக்கை மேற்கொள்ள மாநில அரசுகளுக்கு ஒரே சீரான கட்டமைப்பை வழங்குவதே இதன் நோக்கமாகும்.
- டிஜிட்டல் வழி தீவிரமயமாக்கல், தடையற்ற எல்லைகளை தவறாகப் பயன்படுத்துதல், போலியான ஆதார் தகவல்களைப் பயன்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு நிதியுதவி பெற்ற பரிமாற்ற வலையமைப்புகள் ஆகியவை முக்கியக் கவனம் செலுத்தும் பகுதிகளில் அடங்கும்.
- தேசியப் புலனாய்வு கட்டமைப்பு (NATGRID) ஆனது அங்கீகரிக்கப்பட்ட சட்ட அமலாக்க நிறுவனங்களிடையே உளவுத்துறை பகிர்வை ஆதரிக்கும்.





## கிம்பர்லி செயல்முறை - துணைத் தலைமை

- இந்தியா கிம்பர்லி செயல்முறையின் துணைத் தலைமைப் பொறுப்பினை ஏற்க உள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் கிம்பர்லி செயல்முறையின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்க உள்ளது.
- கிம்பர்லி செயல்முறை என்பது அரசாங்கங்கள், வைரத் தொழில் துறை மற்றும் குடிமைச் சமூக அமைப்புகளை உள்ளடக்கிய ஒரு முத்தரப்பு சர்வதேச முன்னெடுப்பு ஆகும்.
- ஆயுத மோதல்களுக்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்படும், வைரங்களின் வர்த்தகத்தைத் தடுப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் செயல்முறை தற்போது உலகளாவியப் பட்டைத் தீட்டப்படாத வைர வர்த்தகத்தில் 99 சதவீதத்திற்கும் அதிகமானவற்றை உள்ளடக்கிய 60 பங்கேற்பாளர்களைக் கொண்டுள்ளது.

- இந்தியாவின் தலைமைப் பங்கு விதி அடிப்படையிலான இணக்கம், நெறிமுறை சார் மூலத் திரட்டல் மற்றும் உலகளாவிய வைர வர்த்தகத்தில் உள்ளடக்கத்தை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.




## விக்ஸித் பாரத் சிக்சா அதிஷ்டான் மசோதா 2025




- விக்ஸித் பாரத் சிக்சா அதிஷ்டான் மசோதா இந்தியாவில் உயர்கல்விக்கு ஒற்றை ஒழுங்குமுறை ஆணையத்தை முன்மொழிகிறது.
- இது ஒழுங்குமுறைகளை எளிதாக்குதல், பல அமைப்புகளுக்கு இடையேயான இடையீடுகளைக் குறைத்தல் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மசோதாவில் தரநிலைகளை அமைத்தல், அங்கீகாரம் மற்றும் நிதியுதவிக்கான கட்டமைப்புகள் உள்ளன.
- இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள், இந்திய மேலாண்மை கல்வி நிறுவனங்கள் மற்றும் இந்திய அறிவியல் கல்வி நிறுவனங்கள் போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் ஒழுங்குமுறை ஆணையத்தின் கீழ் சேர்க்கப்

படும்.

- இந்த நிறுவனங்கள் வரலாற்று ரீதியாக உயர் தரச் சட்டப்பூர்வ அந்தஸ்து மற்றும் கல்வி சார் சுயாட்சியை அனுபவித்துள்ளன.
- ஒரே சீரான தரநிலைகள் கல்வி நெகிழ்வுத்தன்மை மற்றும் புதுமைகளைக் கட்டுப்படுத்தக் கூடும் என்ற கவலைகள் உள்ளன.
- இந்த மசோதா இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள் அல்லது இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனங்களின் உள் நிர்வாக கட்டமைப்புகளை முறையாகத் திருத்த வில்லை.
- இந்தச் சீர்திருத்தம் முதன்மையான நிறுவனங்களில் சிறப்பினைப் பேணுவதுடன் ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதையும் சமநிலைப்படுத்துகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஆய்வக உதவியாளர் – AILA




- டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் AILA எனப்படும் ஒரு செயற்கை நுண்ணறிவு (AI) அமைப்பை உருவாக்கியுள்ளனர்.
- AILA என்பது செயற்கை நுண்ணறிவு ஆய்வக உதவியாளரை (Artificially Intelligent Lab Assistant) குறிக்கிறது.
- இது மிகக் குறைவான மனித உதவியுடன் உண்மையான ஆய்வகச் சோதனைகளை மேற்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- AILA என்பது ஒரு அறிவியளாலரைப் போல சிந்தித்து முடிவுகளை எடுக்கக் கூடிய ஒரு முகவர் செயற்கை நுண்ணறிவு (AI) கட்டமைப்பைப் பயன்படுத்தி செயல்படுகிறது.
- நுண் தொழில்நுட்ப ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படும் ஒரு கருவியான அணுவிசை நுண்ணோக்கியைப் பயன்படுத்தி இந்த அமைப்பு சோதிக்கப் பட்டது.
- AILA சோதனையானது நேரத்தை பல மணிநேரங்கள் அல்லது நாட்களில் இருந்து சில நிமிடங்களாகக் குறைக்கக் கூடியது.

## ரஷ்யாவின் சந்திர மின் உற்பத்தி நிலையத் திட்டம்




- நீண்டகால சந்திர ஆய்வுப் பயணங்களை ஆதரிப்பதற்கு சந்திரனில் ஒரு மின் உற்பத்தி நிலையத்தை நிறுவும் திட்டத்தை ரஷ்யா அறிவித்துள்ளது.
- இந்தத் திட்டத்தை ரஷ்யாவின் அரசுக்குச் சொந்தமான விண்வெளி நிறுவனமான ரோஸ்கோஸ்மோஸ் உருவாக்கி வருகிறது.
- இந்தச் சந்திர மின் உற்பத்தி நிலையம் ஆனது 2036 ஆம் ஆண்டிற்குள் செயல்படத் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- இது சந்திர உலாவிக் கலங்கள், அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் ஆராய்ச்சி உள்கட்டமைப்புகளுக்கு ஆற்றலை வழங்கும்.
- இந்தத் திட்டம் கூட்டு ரஷ்ய-சீன சர்வதேச சந்திர ஆராய்ச்சி நிலையத்துடன் (ILRS) இணைக்கப்பட்டுள்ளது.
- ரோசட்டம் மற்றும் குர்ச்சடோவ் நிறுவனம் ஆகியவை இதில் ஈடுபட்டுள்ளன என்ற நிலையில் இது அணுசக்தியின் பயன்பாட்டைக் குறிக்கிறது.
- நீண்ட கால ஆய்வுப் பயணங்களுக்கு அதன் நம்பகத் தன்மை காரணமாக அணுசக்தி ஆனது சந்திரனுக்கு ஏற்றதாகக் கருதப்படுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆசிய நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பு

- 40வது ஆசிய நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பு (AWC) மற்றும் 60வது சர்வதேச நீர்ப் பறவைகள் கணக்கெடுப்பு (IWC) ஆனது 2026 ஆம் ஆண்டு ஜனவரி 10 முதல் 11 ஆம் தேதிகள் வரை நடைபெறும்.
- இந்தக் கணக்கெடுப்பு ஆனது, ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள கொரிங்கா வனவிலங்கு சரணாலயம் மற்றும் அருகிலுள்ள ஈரநிலங்களில் நடைபெறும்.
- இது பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கம் (BNHS), இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) மற்றும் இயற்கைக்கான உலகளாவிய நிதியம் (WWF) ஆகியவற்றுடன் இணைந்து ஆந்திரப் பிரதேச வனத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- கோதாவரி முகத்துவாரத்திற்கு அருகிலுள்ள கொரிங்கா வனவிலங்கு சரணாலயத்தில்

நடத்தப்பட்ட பத்தாவது நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பு இதுவாகும்.

- இந்தக் கணக்கெடுப்பு இந்திய நீர்க் கிழிப்பான் (அருகி வரும் இனம்), பெரிய உள்ளான் (அருகி வரும் இனம்), யூரேசிய அரிவாள் மூக்கு உள்ளான் (அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனம்) மற்றும் யூரேசிய சிப்பி பிடிப்பான் (கிளிஞ்சல் கொத்தி) ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.
- கொரிங்கா என்பது குளிர்காலத்தில் இந்திய நீர்க் கிழிப்பான் மற்றும் பெரிய உள்ளான் பறவைகள் ஒன்றாகக் காணப்படும் ஓர் அரிய தளமாகும்.




## புதிய துள்ளிப் பூச்சி இனங்கள் – சிக்கிம்




- சிக்கிமின் உயரமான பகுதியில் கொலம்போலா (துள்ளிப் பூச்சிகள்) என்ற புதிய இனத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் புதிய இனத்திற்கு நீலஸ் சிக்கிமென்சிஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- நீலஸ் இனம் இந்தியாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும்.
- கொல்லம்போலா என்பது மண்ணிலும் பாசியிலும் வாழும் மிகச் சிறிய மண் பூச்சிகள் ஆகும்.
- உயிரியல் குறிகாட்டிகளாகச் செயல்படுகின்ற அவை, அறிவியலாளர்கள் மண் மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.

# மாநிலச் செய்திகள்

## தனு யாத்திரை




- தனு யாத்திரையானது ஒடிசாவின் பர்காரில் தொடங்கப்பட்டது.
- ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற இது உலகின் மிகப்பெரிய திறந்தவெளி நாடக விழாவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திருவிழாவின் போது, பர்கார் நகரானது பண்டைய நகரமான மதுராவாகக் காட்டப்படுகிறது.
- இந்த நிகழ்வானது, மன்னர் கன்சாவின் தோல்வி உட்பட கிருஷ்ணரின் வாழ்க்கையைச் சேர்ந்த அத்தியாயங்களை சித்தரிக்கிறது.
- தனு யாத்திரைக்கு மத்திய அரசு தேசிய விழா அந்தஸ்து வழங்கியுள்ளது.

## இராஜஸ்தானில் திறன் பேசி தடை




- இராஜஸ்தானின் ஜலூர் மாவட்டத்தில் உள்ள ஒரு சாதிப் பஞ்சாயத்து, ஜாட் சமூகத்தின் ஒரு பிரிவைச் சேர்ந்த திருமணமான பெண்கள் திறன் பேசியைப் பயன்படுத்துவதை தடை செய்துள்ளது.

- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் தேதியன்று காஜிபூர் கிராமத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப் பட்டது.
- இந்தத் தடையானது 2026 ஆம் ஆண்டு குடியரசு தினத்திலிருந்து அமலுக்கு வரும்.
- சௌத்ரி குலத்தைச் சேர்ந்த சுந்தமாதா பட்டி பஞ்சாயத்தால் பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவு 15 கிராமங்களுக்குப் பொருந்தும்.
- திருமணமான பெண்கள் திருமணங்கள், பொது இடங்கள் அல்லது அண்டை வீடுகளுக்கு ஒளிப்படப் பதிவு அம்சங்கள் பொருத்தப்பட்ட திறன் பேசிகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.
- குரல் சார் அழைப்புகளை மேற்கொள்வதற்கு அடிப்படை அம்சங்கள் கொண்ட (கீபேட்) தொலைபேசிகள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன அதே நேரத்தில் மாணவர்கள் கல்விக்காக வீட்டில் திறன் பேசிகளைப் பயன்படுத்தலாம்.

# விளையாட்டுச் செய்திகள்

## முதல் கேலோ இந்தியா பழங்குடியினர் விளையாட்டுப் போட்டிகள் 2026




- முதல் கேலோ இந்தியா பழங்குடியினர் விளையாட்டுப் போட்டிகளின் (KITG) முத்திரைச் சின்னம், கருத்துருப் பாடல் மற்றும் உருவச் சின்னம் சத்தீஸ்கரின் பிலாஸ்பூரில் வெளியிடப் பட்டது.
- கேலோ இந்தியா பழங்குடியினர் விளையாட்டுப் போட்டிகள் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் தேதி முதல் நடைபெற உள்ளன.
- கேலோ இந்தியா பழங்குடியினர் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் முதல் மாநிலம் சத்தீஸ்கர் ஆகும்.
- 'மோர்வீர்' என்பது சத்தீஸ்கரின் கலாச்சார அடையாளத்தைப் பிரதிபலிக்கும் அதிகாரப் பூர்வ உருவச் சின்னமாகும்.
- இந்த விளையாட்டுப் போட்டிகள் இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.


# இதரச் செய்திகள்

## PESA மஹோத்சவம் 2025

- PESA திவாஸை முன்னிட்டு விசாகப்பட்டினத்தில் இரண்டு நாட்கள் அளவிலான PESA (பட்டியலிடப்பட்ட பகுதிகளுக்கு பஞ்சாயத்து அமைப்புகளின் விரிவாக்கம்)

மஹோத்சவம் நடைபெற்றது.

- இந்த மஹோத்சவம் ஆனது பழங்குடியினச் சமூகங்களை மேம்படுத்துவதையும் அவர்களின் உரிமைகள் மற்றும் மரபுகளை அங்கீகரிப்பதை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பழங்குடியினரின் கலாச்சாரத்தைக் கொண்டாடுவதற்கும், பாதுகாப்பதற்கும் மற்றும் ஊக்குவிப்பதற்குமான ஒரு தேசிய தளத்தை வழங்குகிறது.
- 1993 ஆம் ஆண்டில், கிராமம், தொகுதி மற்றும் மாவட்ட மட்டங்களில் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் அல்லது உள்ளூர் நிர்வாக அமைப்புகளை நிறுவுவதற்காக இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது (73 வது திருத்தம்).
- ஆனால், 73வது திருத்தச் சட்டம் பழங்குடியினப் பட்டியலிடப்பட்டப் பகுதிகளுக்கு தானாகவே பொருந்தாது.
- PESA சட்டம் பஞ்சாயத்து ராஜ் அமைப்பு விதிகளை பழங்குடியினர் அதிகம் காணப் படும் ஐந்தாவது அட்டவணை பகுதிகளுக்கு விரிவுபடுத்துகிறது.
- 1996 ஆம் ஆண்டில் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.
- இந்தச் சட்டம் இந்தப் பகுதிகளில் உள்ள கிராம சபைகள் மற்றும் பஞ்சாயத்துகளுக்கு அவற்றின் பாரம்பரிய நிர்வாக முறைகளைப் பராமரிக்க கூடுதல் அதிகாரங்களை வழங்குகிறது.
- தற்போது, 10 மாநிலங்களுக்கு ஐந்தாவது அட்டவணை சார் பகுதிகள் உள்ளன.
- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ஆனது 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் தேதியை PESA தினமாகக் கொண்டாடுகிறது.




## ஹரிவல்லப் சங்கீத சம்மேளனம் 2025

- 150வது ஸ்ரீ பாபா ஹரிவல்லப் சங்கீத சம்மேளனம் நிகழ்வு பஞ்சாபின் ஜலந்தரில் தொடங்கியது.
- இது ஆண்டுதோறும் ஸ்ரீ தேவி தலாப் கோவிலில் நடைபெறுகின்ற இந்தியாவின் பழமையான இந்துஸ்தானி பாரம்பரிய இசை விழாவாகும்.
- இந்த விழா மத்திய கலாச்சார அமைச்சகத்தின் கீழ் உள்ள வடக்கு மண்டல கலாச்சார மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த நிகழ்வு ஒன்பதாவது சீக்கிய குருவான குரு தேக் பகதூரின் 350வது தியாக ஆண்டு நிறைவு விழாவிற்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.


Dedicated to 350th Martyrdom Anniversary of Shri Guru Tegh Bahadur ji
150th Shree Baba
Harivallabh Sangeet Sammelan
26, 27, 28 Dec 2025
Organised by
Shree Baba Harivallabh Sangeet Mahasabha (Regd.)
Devi Talab, Jalandhar, Punjab

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★